பக்கங்கள்: 07

காலைக்கதிர்
Kālaikkathir — மாலைப்பதிப்பு

சாயல் 01 | வள்ளுவர் ஆண்டு 2052 | தை 10 | சனிக்கிழமை 23.01.2021 | கதிர் 310

தொற்று உறுதியானதையடுத்து

## ஹிக்கடுவை சிகிச்சை நிலையத்தில் பவித்ரா

சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சிக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் ஹிக்கடுவை சிகிச்சை நிலையத்தில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சுகாதார அமைச்சருக்கு மேற்கொள்ளப்பட்ட ரெபிட் அன்டிஜன் ☞2

# சாவடைந்த நான்கு தமிழக மீனவர்களின் சடலங்களும் இந்தியாவிடம் ஒப்படைப்பு








(எஸ்.நிதர்ஷன், நா.லோகதயாளன்)

இலங்கைக் கடற்படையினரின் கப்பலுடன் மோதி விபத்துக்குள்ளானதை அடுத்து உயிரிழந்த 4 தமிழக மீனவர்களினதும் சடலங்கள் இந்திய அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து இன்று இந்தச் சடலங்கள் இந்தியக் கடலோரக் காவல் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்று இலங்கைக் கடற்படைப் பேச்சாளர் கப்டன் இந்திக்க டி சில்வா தெரிவித்தார்.

கடந்த 18ஆம் திகதி இரவு இலங்கைக் கடற்படையின் அதிவேக ரோந்துக் கப்பலுடன் தமிழக மீனவர்கள் பயணித்த படகு மோதியதால் மூழ்கிய படகில் இருந்து 4 மீனவர்களது சடலங்களும் மீட்கப்பட்டு காங்கேசன் துறைப் பொலிஸாரால் யாழ். போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டன.

இந்தநிலையில், தமது நாட்டு மீனவர்களுடைய சடலங்களைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரக ☞2

## கந்தரோடையில் தீர்த்தக்கேணி, அரச மரம் தொடர்பில் விசாரித்த நபர்களால் பதற்றம்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், சுன்னாகம் கந்தரோடை வற்றாக்கை அம்மன் கோயில் புராதன தீர்த்தக்கேணி மற்றும் அதனை அண்டியுள்ள அரச மரம் தொடர்பில் இராணுவம் எனக் கூறிய இனந்தெரியாதோர் விசாரித்ததால் மக்களிடையே குழப்பம் ஏற்பட்டுள்ளது.


நேற்று மாலை 5 மணியளவில் ஆலயத்துக்கு வருகை தந்த இனந்தெரியாத சிலர், பூசகரிடம் தம்மை ☞2

# முறையற்ற அகழ்வாராய்ச்சி மூலம் தமிழரைக் கிளர்ந்தெழ வைக்காதீர்!

### விதுரவிடம் மாவை இடித்துரைப்பு

யாழ்ப்பாணம், ஜனவரி 23

வடக்கு மாகாணத்தில் முறையற்ற தொல்லியல் அகழ்வாராய்ச்சிப் பணிகள் மூலம் தமிழ் மக்களைக் கிளர்ந்தெழ வைக்காதீர்கள் என்று தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவிடம் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராஜா கேட்டுக்கொண்டார்.





இராஜாங்க அமைச்சருக்கும் மாவை சோ.சேனாதிராஜாவுக்கும் இடையில் நேற்று தொலைபேசி ஊடாக நீண்ட நேரம் பேச்சு நடைபெற்றது. ☞2

கொழும்பு துறைமுக விவகாரம்:

## எம் மீதான குற்றச்சாட்டுக்களை அடியோடு நிராகரிக்கின்றோம்

### சீற்றத்துடன் ரணில் தெரிவிப்பு



கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கோ அல்லது ஜப்பானுக்கோ விற்பது குறித்து நல்லாட்சி அரசில் எந்தவித உடன்படிக்கையும் மேற்கொள்ளவில்லை. ☞2

# உடன்படிக்கையைத் தூக்கி வீச முடியாது; இந்தியாவைப் பகைக்க விரும்பவில்லை

### ஜனாதிபதி கோட்டா பகிரங்க அறிவிப்பு



முன்னைய அரசு இந்தியாவுடன் செய்து கொண்டுள்ள உடன்படிக்கையை நான் நினைத்தால் போல் நிராகரிக்க முடியாது. அவ்வாறு செய்தால் நாம் சீனாவை சார்ந்துள்ளோம் என்ற தவறான நிலைப்பாடு உருவாகும்.

- இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தியாவுடன் செய்துகொள்ளும் துறைமுக அபிவிருத்தி வேலைத்திட்டம் ☞2

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை

# வெளிநாட்டுக்குத் தாரை வார்க்காதீர்!

### மைத்திரியும் போர்க்கொடி



கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை வெளிநாட்டு நிறுவனங்கள் எதற்கும் வழங்கக் கூடாது என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

களுத்துறை பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றின்போது, ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:- ☞2

## ராஜபக்ஷக்களின் சகா உதயங்கவுக்கு எதிராக சஜித் அணியினர் முறைப்பாடு

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மயந்த திஸாநாயக்க, ரஷ்யாவின் முன்னாள் தூதுவரான உதயங்க வீரதுங்கவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும்படி கோரி பொலிஸ் தலைமையகத்தில் முறையிட்டுள்ளார். ☞2

## இலங்கைக்கு எதிராக இம்முறை சர்வதேச பொறிமுறை வேண்டும்

### ஐ.நாவிடம் மன்னிப்புச் சபை வலியுறுத்து

இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் கண்காணிப்பதற்கும் அறிக்கை சமர்ப்பிப்பதற்கும் கடந்த காலங்களில் இடம்பெற்ற பாரிய மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஆதாரங்களைச் சேகரிப்பதற்கும் ☞2

## வெளிநாட்டுக்குத் தாரை .............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நான் ஜனாதிபதியாக இருந்தபோது, கிழக்கு முனையத்தை வழங்குமாறு வெளிநாடுகள் கேட்டபோதும், அதற்கு நான் இணங்கியிருக்கவில்லை.

அதனை எந்தவொரு வெளிநாட்டு நிறுவனத்துக்கும் கொடுக்க மாட்டேன் என்று 2015 ஜனாதிபதித் தேர்தலின் போது வழங்கிய வாக்குறுதியை எனது பதவிக் காலத்தில் அவ்வாறே பேணினேன். - என்றார்.

இதேவேளை, கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் கலாநிதி நாலக கொடஹேவா குறிப்பிடுகையில்,

துறைமுகத்தின்கிழக்குமுனையத்தை இந்தியாவுக்கு வழங்கமாட்டோம் என்று ஜனாதிபதி தெளிவாகக் கூறியுள்ளார். ஆனால், கிழக்கு முனையத்துக்கு 50 வீதத்துக்கும் குறைவான முதலீடு வருமாக இருந்தால் அந்த முனையத்தை வெளிநாட்டுக்கு வழங்குவதாக அர்த்தப்படுத்திப் பார்க்கக்கூடாது. - என்றார்.

## இலங்கைக்கு எதிராக .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சர்வதேச நீதிப்பொறிமுறை ஒன்றை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை எதிர்வரும் 46 ஆவது கூட்டத்தொடரின் போது அறிமுகப்படுத்த வேண்டும்.

- இவ்வாறு சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து சர்வதேச மன்னிப்புச் சபையால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 46 ஆவது கூட்டத் தொடர் ஜெனிவாவில் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி ஆரம்பமாகி, மார்ச் மாதம் 19 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது. இதன்போது இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் கண்காணிப்பதற்கும் அறிக்கை சமர்ப்பிப்பதற்கும் கடந்த காலங்களில் இடம்பெற்ற பாரிய மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஆதாரங்களைச் சேகரிப்பதற்கும் சர்வதேச நீதிப்பொறிமுறை ஒன்றை அறிமுகப்படுத்த வேண்டும்.

இலங்கையில் மனித உரிமை அமைப்புக்கள் மற்றும் ஊடகங்கள் மீதான அடக்குமுறையில் ஏற்பட்டிருக்கும் அதிகரிப்பு, முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் மீதான தாக்குதல்கள், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 30/1 தீர்மானத்தில் உள்ளவற்றில் மிகவும் வரையறுக்கப்பட்ட தீர்மானங்களே நிறைவேற்றப்பட்டுள்ளமை மற்றும் பொறுப்புக்கூறல் உள்ளடங்கலாக 30/1 தீர்மானத்திலிருந்து விலகுவதாக இலங்கை அறிவித்தமை ஆகியவற்றின் பின்னணியில் இத்தகையதொரு சர்வதேச நீதிப்பொறிமுறை அவசியமாகும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 46 ஆவது கூட்டத் தொடரில் மனித உரிமைகள் ஆணையாளரின் அலுவலகத்தால் முன்வைக்கப்படும் பரிந்துரைகளின் அடிப்படையில், ஒரு முறையான பொறிமுறையின் கீழ் இலங்கை அரசு செயற்படும் என்று எதிர்பார்க்கின்றோம்.

கடந்த சில வருடங்களில், குறிப்பாகக் கடந்த வருடம் இலங்கையின் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள், சட்டத்தரணிகள் உள்ளடங்கலாக சிவில் சமூகக்குழுக்களுக்கான இடைவெளி பாதகமான முறையில் மட்டுப்படுத்தப்பட்டமையை எம்மால் அவதானிக்க முடிந்தது.

குறிப்பாக நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகையின் ஊடகவியலாளர் தரிஷா பாஸ்டியன்ஸ் மீதான அடக்குமுறை, சமூக வலைத்தள செயற்பாட்டாளர் ரம்ஸி ரஸீக் மற்றும் சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா ஆகியோரின் கட்டாய தடுத்துவைப்பு, எழுத்தாளர் க்திக சத்குமாரவுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணை ஆகியவை தொடர்பில் நாம் ஏற்கனவே விசேடமாக சுட்டிக்காட்டியிருந்தோம்.

இத்தகைய அடக்குமுறைகளின் விளைவாக பல செயற்பாட்டாளர்கள் நாட்டைவிட்டுத் தப்பிச்சென்றிருக்கின்றார்கள். அதுமாத்திரமன்றி இலங்கையில் தொடர்ந்தும் சிறுபான்மையினத்தவர்களை இலக்குவைத்து முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் பெரிதும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளன. - என்றுள்ளது.

## ராஜபக்ஷக்களின் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அண்மையில் இலங்கை வந்த உக்ரைன் நாட்டுச் சுற்றுலாப் பயணிகளுடன் சிகிரியா சென்றுள்ள உதயங்க வீரதுங்க, அங்கு பெரிதும் மதிக்கப்படுகின்ற மற்றும் தொல்பொருள் திணைக்களத்தால் புகைப்படம் எடுக்க வேண்டாம், அதன் மீது நிற்க வேண்டாம் என அறிவுறுத்தப்பட்ட இடங்களில் சட்டங்களை மீறி குறித்த குழுவினர் ஈடுபட்டனர் என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொல்பொருள் திணைக்களத்தின் சட்டங்களை மீறுகின்றவர்களுக்குக் குறைந்த பட்சம் இரண்டு வருடங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்படும் என்கின்றதையும் மறந்த திஸாநாயக்க எம்.பி. தனது முறைப்பாட்டுக் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிலையில், அவர் பொலிஸ்மா அதிபர் சி.டி விக்கிரமரத்னவிடம், இது குறித்து விசாரணை செய்யும்படி நேற்று முறைப்பாடு செய்தார்.

## உடன்படிக்கையைத் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கடனோ, குத்தகை வேலைத்திட்டமோ அல்ல. இது முற்றுமுழுதாக முதலீடாகும். அரசு முன்னெடுக்கும் சகல வேலைத் திட்டத்துக்கும் நான் பொறுப்பை ஏற்றுக் கொள்கின்றேன் எனவும் அவர் குறிப்பிட்டார்.

களுத்துறையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் தற்போது ஒரு சில நெருக்கடி நிலைமைகள் உருவாகியுள்ளன. துறைமுக அபிவிருத்தி விடயங்களில் தொழிற்சங்கங்கள் போராடி வருகின்றன.

இதேபோன்றுதான் எம்.சி.சி. ஒப்பந்தம் தொடர்பான சிக்கல்கள் எழுந்த வேளையில் குழுவொன்றை அமைத்து அந்த ஒப்பந்தத்தின் நன்மை தீமைகளை ஆராயவும் எனக்கு அறிவிக்கவும் வலியுறுத்தினேன்.

இந்த விடயங்களை ஆராய்ந்த குழுவினர் எம்.சி.சி. ஒப்பந்தம் மோசமானது எனவும், அரசமைப்புக்கு முரணானது எனவும் கூறினர்.

எனவே, இந்த நிலைமைகளை அமெரிக்காவுக்குத் தெரியப்படுத்தி அவர்கள் முன்வைத்த முறைமைக்கு அமைய நடைமுறைப்படுத்த முடியாது என அறிவித்தோம்.

அவர்களின் ஒப்பந்தத்திலிருந்து நாம் வெளியேறிவிட்டோம். இன்று நாட்டில் எம்.சி.சி. பிரச்சினை இல்லை. அதனை நாம் நிறுத்திவிட்டோம்.

இப்போது அது தொடர்பில் எவரும் எதுவும் பேசுவதில்லை. அதேபோன்று தற்போது எழுந்துள்ள கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையம் தொடர்பான உடன்படிக்கை. முன்னைய ஆட்சியில் ஜனாதிபதி, இந்தியப் பிரதமர் இருவருக்கும் முன்பாக அப்போதைய அமைச்சர் சாகல ரத்நாயக்க, இந்தியப் பிரதிநிதிகளுடன் செய்துகொண்ட ஒப்பந்தமொன்றுள்ளது. நான் ஆட்சிக்கு வந்ததும் இந்த உடன்படிக்கைகளைச் செய்ய மாட்டேன் என தூக்கி வீச முடியாது.

அவ்வாறு செய்தால் தவறான எண்ணக்கருவொன்று உருவாகும். ராஜபக்ஷக்கள் அனைத்தையும் சீனாவுக்கு கொடுப்பார்கள் எனக் கூறப்படும்.

இது முறையானதல்ல. நாம் எந்த நாட்டுடனும் தொடர்புபட்டுச் செயற்படவில்லை - என்றார்.

## எம் மீதான குற்றச் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
- இவ்வாறு முன்னாள் பிரதமரான ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை அபிவிருத்தி செய்யும் உடன்படிக்கைகள் மாத்திரமே தமது ஆட்சியில் மேற்கொள்ளப்பட்டன எனவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையம் அபிவிருத்தி செய்யப்படும் நேரத்தில் இந்தியா, ஜப்பான் ஆகிய நாடுகளின் நிறுவனங்கள் குறுகிய கால குத்தகைக்கு முனையத்தை இயக்கும். மாறாக நிரந்தரமாக கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை விற்கும் வேலைத் திட்டங்களை முன்னெடுக்கவில்லை.

அதேபோல் கடந்த ஆட்சியில் அமைச்சரவையில் இதற்கான அனுமதியைப் பெற்றுக்கொண்டதுடன் 51 வீத உரிமம் இலங்கைக்கு இருக்கும் விதமாகவே குத்தகை தொடர்பான உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டது.

இந்தியாவின் அதானி நிறுவனம் 500 மில்லியன் அமெரிக்க டொலர்கள் முதலீடும் ஜப்பானின் 'ஜய்கா' நிறுவனம் 190 மில்லியன் அமெரிக்க டொலர்களும் முதலீடு செய்தே இந்த அபிவிருத்தியின் முதற்கட்ட வேலைத்திட்டத்தை முன்னெடுக்கவிருந்தோம்.

இவ்வாறான நிலைமையில் கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை விற்பதற்கு எமது அரசு இணங்கியதாக முன்வைக்கும் குற்றச்சாட்டுகளை அடியோடு நிராகரிக்கின்றோம். - என்றார்.

## கந்தரோடையில் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
காரைநகர் முகாமைச் சேர்ந்த படையினர் என அறிமுகப்படுத்திக்கொண்டு, ஆலயத்துக்குச் சொந்தமான தீர்த்தக் கேணி மற்றும் அதனை அண்டியுள்ள அரச மரம் உள்ள நிலப்பகுதி தொடர்பில் கேட்டறிந்துள்ளனர்.

அந்தக் கேணி, அரச மரம் உள்ள நிலப்பகுதி யாருக்குச் சொந்தமானது என்று இராணுவத்தினர் எனக் கூறிக்கொண்டு வந்தவர்கள் பூசகரிடம் விசாரித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பூசகரால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தனுக்கு இன்று தகவல் எத்திவைக்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்துக்கு விரைந்த நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் மற்றும் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் பா. கஜதீபன் ஆகியோர் அந்தப் பகுதி மக்களுடன் கலந்துரையாடியுள்ளனர்.

கந்தரோடையில் தொல்பொருள் திணைக்களத்துக்கு இடம் ஒதுக்கப்பட்டுள்ள நிலையில், இந்து ஆலயத்தை இராணுவம் எனக் கூறிக்கொண்டு சிங்களம் பேசும் நபர்கள் விசாரித்தமை ஊர் மக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

## முறையற்ற அகழ்வா ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதன்போது, யாழ். நிலாவரைப் பகுதியில் திடீரென தொல்லியல்துறையினர் மற்றும் இராணுவத்தினர் உள்ளிட்டவர்கள் வருகை தந்து தொல்லியல் அகழ்வாராய்ச்சிகளை நடத்தியமை தொடர்பில் இராஜாங்க அமைச்சரின் கவனத்துக்கு மாவை கொண்டுவந்தார்.

அத்துடன், இந்தச் செயற்பாடானது தமிழ் மக்கள் மத்தியில் கிளர்ச்சிகளை ஏற்படுத்துகின்றது எனவும், பதற்றமான சூழல்களை உருவாக்குகின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

முல்லைத்தீவு - குருந்தூர் மலை விடயம் தொடர்பாகவும் இராஜாங்க அமைச்சருடன் மாவை பேசினார்.

மேலும், யாழ். பல்கலைக்கழகத்தில் தொல்லியல்துறை சார்ந்த நிபுணத்துவம் வாய்ந்தவர்கள் இருக்கும்போது பெரும்பான்மை சமூகத்தினரை மட்டும் பயன்படுத்தி நிலங்களை ஆக்கிரமிக்கும் வகையிலான செயற்பாடுகளை உடன் நிறுத்தும்படியும் அவர் கோரினார்.

இதற்குப் பதிலளித்த இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, எதிர்வரும் காலத்தில் அகழ்வாராய்ச்சிப் பணிகளின்போது யாழ். பல்கலைக்கழகத் தரப்பினரையும் உள்ளீர்ப்போம் என்றும், இனம், மதத்தின் பெயரால் தொல்லியல்துறை செயற்படவில்லை என்றும் உறுதியளித்தார்.

## ஹிக்கடுவை சிகிச்சை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பரிசோதனையில் நேற்று கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்த நிலையில் அவருக்கு இன்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது எனச் சுகாதார அமைச்சு இன்று நண்பகல் உறுதிப்படுத்தியது.

இதேவேளை, நேற்று ஸ்ரீ ஜயவர்தனபுர மருத்துவமனையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் இவர் இறுதியாகக் கலந்துகொண்டார் எனவும், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உட்பட சுகாதாரப் பிரிவின் உயர் அதிகாரிகள் சிலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர் எனவும் தெரியவந்துள்ளது.

அவ்வாறே சுகாதார அமைச்சர் நேற்றுமுன்தினம் நெலும் மாவத்தையில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி கட்சிக் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றிலும் கலந்துகொண்டார் எனவும் அறியவந்துள்ளது.

## சாவடைந்த நான்கு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதிகாரிகள் கேட்டுக்கொண்டனர்.

தூதரகத்தின் மேற்படிக் கோரிக்கை பொலிஸார் ஊடாக நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. நீதிமன்ற அனுமதியின் பிரகாரம் சடலங்கள் தூதரகத்திடம் கையளிக்கப்பட்டன.

இவ்வாறு கையளிக்கப்பட்ட சடலங்கள் இன்று காலை காங்கேசன்துறை துறைமுகத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டன.

குறித்த சடலங்களை எடுத்துச் சென்ற கடற்படையினர் முற்பகல் 10.30 மணியளவில் சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து இந்தியக் கரையோரக் காவல் படையினரிடம் அவற்றைக் கையளித்தனர்.




# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தடுப்பூசியில் தடுமாற்றம்

**கொரோனாக் கொடூரம் மென்மேலும் தீவிரமடைந்து வருகின்றது.**

**அமெரிக்காவில் அந்நாட்டு அதிபராக இருந்த ரொனால்ட் ட்ரம்பையே விட்டு வைக்காத கொரோனா, இலங்கையில் கொரோனாப் பரவல் கட்டுப்பாட்டைக் கவனிக்க வேண்டிய சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராய்ச்சியையும் விட்டு வைக்கவில்லை.**

***"நாட்டில் நாளொன்றுக்கு 900 ஐ அண்மித்ததாக தொற்றாளர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. நிலைமை இப்படியே தொடருமானால் தொற்றாளர் எண்ணிக்கை அதிகரிப்போடு, எதிர்வரும் இரு வாரங்களில் கொரோனாத் தொற்று மரணங்களின் எண்ணிக்கையும் எகிறும்.***

***"நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கு துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி எடுக்கத் தவறினால் நாட்டின் சுகாதார முறைமையே வீழ்ச்சியுற்று முடங்கும்."***

**– இவ்வாறு கூறியிருக்கின்றார் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பணிப்பாளர் வைத்தியர் ஹரித அளுத்கே.**

**மருத்துவத் துறையின் இந்த எச்சரிக்கை அரசுத் தரப்பின் காதில் ஏறியதாகத் தெரியவில்லை.**

**இந்த சுகாதார நெருக்கடி மருத்துவ மற்றும் விஞ்ஞான ரீதியில் அணுகப்படாமல் அரசியல், பொருளாதார நோக்கங்களின் அடிப்படையிலேயே கையாளப்படுகின்றன என்றே தோன்றுகின்றது.**

**அப்படிப் பார்த்தாலும் கூட இறுதியில் மருத்துவத் துறை சுட்டிக் காட்டிய நிலைமையே ஏற்படும். அரசியல், பொருளாதார இலக்குகளும் நோக்கங்களும் கூட எதிர்பார்த்த பெறுபேறைத் தராமல் பெரும் பின்னடைவைத்தான் ஏற்படுத்தும். மருத்துவத் துறையினரின் எச்சரிக்கை விஞ்ஞான பூர்வமானது; யதார்த்த பூர்வமானது. அதைத் தூக்கிக் கடாசுவது நாடு தனக்குத் தானே இழைக்கும் பேராபத்தாகவே முடியும் என சம்பந்தப்பட்ட தரப்புகள் அபாயச் சங்கு ஒலிக்கின்றன.**

**ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கு கொரோனாத் தடுப்பூசிகளையும் உடனடியாகச் செலுத்துவது அத்தியாவசிய தேவையாகின்றது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.**

**உலக சுகாதார ஸ்தாபனத்தினால் ஏற்று அங்கீகரிக்கப்பட்டதும், இலங்கைக்கு நடைமுறையில் பொருத்தமானதுமான தடுப்பூசி வகையை விரைந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதனைத் தாமதமின்றி மக்களுக்குச் செலுத்துவதன் மூலமும் கொரோனாப் பரவலை ஓரளவுக்குக் கட்டுப்படுத்தக் கூடியதாக இருக்கும் என்றும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பணிப்பாளர் வைத்தியர் ஹரித அளுத்கே கூறுகின்றார்.**

**கொரோனாத் தடுப்பூசிகளைக் கொள்வனவு செய்யும் போது அது தொடர்பான தீர்மானம் விஞ்ஞான பூர்வமானதாக இருக்க வேண்டுமே தவிர, அது அரசியல் ரீதியானதாக இருக்கக் கூடாது என்கின்றார் அவர்.**

**மிக முக்கியமான – யதார்த்த பூர்வமான – உண்மையான – பிரச்சினை இது.**

**கொரோனாத் தொற்று தடுப்பு நடவடிக்கைகள் ஆரம்பித்த நாள் தொட்டு வெளிப்பேச்சுக்கு மருத்துவ மற்றும் சுகாதாரத் துறையினரின் நிபுணத்துவத் தீர்மானம் மற்றும் வழிகாட்டல்களுக்கு அமைவாக அவை முன்னெடுக்கப்படுகின்றன என்றே ஆட்சித் தரப்பால் கூறப்பட்டு வருகின்றது. ஆனால் எடுக்கும் நடவடிக்கைகள், அணுகுமுறைகளைப் பார்த்தால் அவை விஞ்ஞானபூர்வமானவையாக, நிபுணத்துவ ரீதியிலானவையான இருப்பதில்லை. அரசியல் ரீதியானவையாக இருந்து வருகின்றன.**

**தடுப்பூசித் தெரிவும் விஞ்ஞானபூர்வமானதாக இருக்க வேண்டும், அரசியல் ரீதியானதாக இருக்கக் கூடாது என்று சுட்டப்படுகின்றது. ஆனால் தடுப்பூசியை தருவிப்பதா, அதனை மக்களுக்குச் செலுத்துவதா என்று கூட இன்னும் தெளிவாகத் தீர்மானிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அது தொடர்பான முடிவு – தீர்மானம் கூட – அரசியல் தலைமைத்துவங்களின் கைகளில் சிக்கிக் கிடக்கின்றதே தவிர, மருத்துவ சுகாதார நிபுணத்துவத் தரப்பின் கைகளில் அல்ல.**

**தடுப்பூசி செலுத்தும் தீர்மானம் காலம் பிந்தி எடுக்கப்பட்டாலும், எந்தத் தடுப்பூசியைப் பயன்படுத்துவது என்ற முடிவும் இழுபறிப்பட்டே எடுக்கப்படும் போலத் தெரிகின்றது.**

**நமது பக்கத்து நாடு இந்தியா தடுப்பூசி உற்பத்தியில் முன்னணியில் நிற்கின்றது. பலநாடுகளும் அதன் தடுப்பூசியை பெற்றுக் கொள்வதில் முனைப்புக் காட்டுகின்றன. ஏற்கனவே பல நாடுகளுக்கும் அது தடுப்பூசியை விநியோகிக்க ஆரம்பித்து விட்டது. பல வறிய நாடுகளுக்கு – பங்களாதேஷ் போன்ற அயல் நாடுகளுக்கு – கணிசமான எண்ணிக்கை தடுப்பூசிகளை இலவசமாக இந்தியா வழங்கி வருகின்றது.**

**இந்த மாதம் முதல் வாரத்தில் நமது நாட்டைத் தேடி வந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரிடம், அந்தத் தடுப்பூசிகளை வழங்குங்கள் என்று நாட்டின் தலைவர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விண்ணப்பித்தமையோடு சரி, அதற்கு மேல் இந்தியத் தரப்பிடமிருந்து அதனைப் பெற்றுக் கொள்வதற்குத் தீவிர முயற்சி எதுவும் முனைப்பாக முன்னெடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.**

**எந்த நாட்டின், எந்த ரகத் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வது என்பது தொடர்பான நிபுணத்துவ ஆராய்வுகளில் நாடு ஈடுபட்டிருப்பதாகவும், அவை தொடர்பில் ஒரு தீர்மானம் எடுக்கப்பட்ட பின்னர் தடுப்பூசிகைளத் தருவிப்பது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அரசுத் தரப்பில் 'மிதப்போடு' கூறப்படுகின்றது. யாசகம் பெற்றாவது தடுப்பூசிகளைக் கொண்டு வந்து சேர்க்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கும் நாடு, இப்படி மிதப்போடு பேசி நடந்து கொண்டால், உருப்பட்ட மாதிரித்தான்...!**

# சிவில் உடையில் வந்த இராணுவத்தினரே நிலாவரையில் கிடங்கு வெட்டினார்கள்!

## என்கிறார் சிவாஜிலிங்கம்




சிவில் உடையில் வந்த இராணுவத்தினரே நிலாவரையில் கிடங்கு வெட்டினார்கள் என தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகம் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே எம்.கே.சிவாஜிலிங்கம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தெடர்ந்து தெரிவிக்கையில் –

இலங்கை அரசுடைய தொடர் நடவடிக்கையாக காணி நிலம் அபகரிப்பு அதே போர்வையிலே இது ஒரு சிங்கள பௌத்த நாடாக காட்டுவதற்குரிய முயற்சிகள். தமிழர்களுடைய பாரம்பரிய நிலங்கள் பறிக்கப்படுகின்றமை மாத்திரம் அல்ல மத அடையாள சின்னங்கள் சிதைக்கப்பட்டு பௌத்த மத சின்னங்கள் புகுத்தப்படுகின்ற ஒரு நிலைமையை நாங்கள் பார்க்கின்றோம்.

இதற்கு நிச்சயமாக எங்களுடைய தமிழர் தரப்பில் இருந்து மிகப்பெரிய அளவிலான ஓர் எதிர்ப்பு இயக்கம் இல்லாமல் இருப்பது பெரிய குறைபாடு.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மேய்ச்சல் தரை, திருகோணமலை மாவட்டத்தில் கிண்ணியா வெண்ணீர் ஊற்று பிரச்சினை அதே போன்று திருகோணமலையில் எல்லைக் கிராமமாகிய தென்னைமரவாடியில் தொல்பொருள் திணைக்களத்தால் பிரச்சினைகள் அதே போன்று வவுனியா, மன்னார் மாவட்டத்திலே பல பிரச்சினைகள் இருக்கின்றன.

நாங்கள் மீண்டும் மீண்டும் தென்னிலங்கை மக்களுக்குச் சொல்ல விரும்புகின்றோம் நாங்கள் புத்த பெருமானுக்கு எதிரானவர்கள் அல்லர்.

மிகப்பெரிய அரசனாக இருந்து அனைத்தையும் துறந்து வந்த புத்த பெருமானின் போதனைகளை நீங்கள் பின்பற்றாமல் அதே புத்தபெருமானை எங்களை ஆக்கிரமிக்கின்ற நடவடிக்கைக்கு பயன்படுத்துவதால் தான் நாங்கள் புத்தபெருமானை எதிர்க்கின்றோம்.

எங்களுக்கு இன மத வெறி இல்லை நீங்கள் சிங்கள பௌத்த நிகழ்ச்சி நிரலுக்கு கீழ் எங்களை ஆக்கிரமிக்க முயற்சிப்பதால் தான் நாங்களும் எதிர்க்கின்றோம். தென்னிலங்கையிலே அவர்களுக்கு ஆட்சி சரிவு ஒரு வருடத்தில் வந்துவிட்டது.

பல இடங்களைத் தொடர்ந்து ஆக்கிரமிப்பவர்கள் யாழ்ப்பாணம் நிலாவரையில் கடந்த வியாழக்கிழமை வந்து தோண்ட ஆரம்பித்து இருக்கின்றார்கள். இதில் தெளிவாகத் தெரிகின்றது தோண்ட ஆரம்பித்த பொழுது நான்கு பேர் சீருடை அணியாத சிவிலுடையில் வந்த இராணுவத்தினர்தான் கிடங்கு வெட்டி இருக்கின்றார்கள் அவர்களுக்கு அங்கு என்ன வேலை.

தொல்பொருள் திணைக்கள ஊழியர்கள் வந்தார்கள் என்றாலும் பரவாயில்லை அதன் பின்னர்தான் தொல்பொருள் திணைக்கள ஊழியர்கள் பொறுப்பெடுத்து இருக்கின்றார்கள். அங்கே யாழ்ப்பாண – கிளிநொச்சி மாவட்டத்துக்குப் பொறுப்பான உதவி அத்தியட்சகர் நின்றார். எனக்கு தகவல் அங்கிருந்து வந்ததும் உடனடியாக அங்கு சென்றபொழுது வலிகாமம் கிழக்கு பிரதேச சபை தவிசாளர் நிரோஸ் நின்றார்,

ஊடகவியலாளர்கள் நின்றார்கள் அத்தோடு ஒரு சில பொதுமக்கள் நின்றார்கள். அவருக்கு சிங்கள மொழியிலே மிக காத்திரமாக பதிலை நான் வழங்கியிருந்தேன் புல்லு வெட்ட வேண்டும் என்றால் எதற்கு கிடங்கு.

அத்தோடு கட்டடங்களைக் கட்டுவதற்கு மதிப்பீடுகள் செய்ய இருக்கின்றோம் என்றார்கள். கிடங்கு T வடிவில் ஆழமாக வெட்டப்பட்டிருந்தது. உள்ளிருந்து எடுக்கப்பட்ட மண் சுவர் அருகில் போடப்பட்டிருந்தது. அதுக்குள் எதையாவது கொண்டுவந்து புதைத்தார்களோ தெரியவில்லை. இன்றும் சில காலத்தில் புத்தரோ அல்லது வேற ஏதோ வெளிவரலாம் இதே போன்று தென்னிலங்கையில் பல இடங்களில் இடம்பெற்றுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

# பதுளை, பசறை தேசிய பாடசாலையில் 6 மாணவர்களுக்கு கொரோனா தொற்று!

பதுளை – பசறை தேசிய பாடசாலையில் 6 மாணவர்களுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

குறித்த பாடசாலையில் கல்வி பயிலும் 4 மாணவர்கள் மற்றும் 2 மாணவிகளுக்கே இவ்வாறு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் குறித்த மாணவர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் மற்றும் அவர்கள் சென்று வந்த பகுதிகள் இனங்காணப்பட்டு அந்தப் பகுதிகளிலும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ள சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதேவேளை ஹம்பலந்தோட்டை – மாகோலனிய பகுதிக்கு பயணக்கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் 34 பேர், கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டமையை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

# கிளிநொச்சி கந்தன் குளத்து நீரை பாதுகாப்பாக வெளியேற்ற ஏற்பாடு!



கிளிநொச்சி, கந்தன் குளத்தைப் பாதுகாக்க நீர்ப்பாசனத் திணைக்கள பொறியியலாளரின் ஆலோசனைக்கு அமைய குளத்து நீரைப் பாதுகாப்பாக வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த குளத்தில் கடந்த வியாழக்கிழமை பிற்பகல் முதல் நீர்க் கசிவைக் கட்டுப்படுத்த கமநல சேவைகள் திணைக்களமும், இராணுவத்தினரும், பொதுமக்களும் பணியில் ஈடுபட்ட போதிலும் முழுமையாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியவில்லை.

இந்நிலையில், நேற்று (வெள்ளிக்கிழமை) காலை மாவட்ட இடர் முகாமைத்துவ நிலைய அதிகாரிகளும், நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகளும் குளத்தைப் பார்வையிட்டனர்.

அத்துடன், கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளார் த.ராஜகோபு தலைமையில் நீர்க் கசிவைக் கட்டுப்படுத்தும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

எனினும், குறித்த நீர் வெளியேற்றத்தை முழுமையாகக் கட்டுப்படுத்த முடியாத நிலையில், சிவில் பாதுகாப்புத் திணைக்கள உத்தியோகத்தர்களும் ஒத்துழைப்பு வழங்கியிருந்தனர். இந்நிலையில், வலது கரை துருசு திறந்துவிடப்பட்டதுடன் அதிகாரிகளின் கண்காணிப்புடன் குளத்தின் வால் கட்டுப் பகுதி வெட்டி விடப்பட்டுள்ளது.

எனவே, நீர் வடிந்தோடுவதால் தாழ் நிலப் பகுதி மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் குறிப்பிட்டுள்ளது. இதேவேளை, தமது விவசாயம் பாதிக்கப்படலாம் என விவசாயிகள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

# இஞ்சிக் கன்றுகள் விற்பனைக்கு!

நல்ல தரமான இரண்டு அடி வரை வளர்ந்த ஒன்றரை மாத இஞ்சிக் கன்றுகள் யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு.

விலை – 150/=




கற்பகவனம் விற்பனை நிலையம்.
461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் முற்றம் - Yarl Muttam)
021 492 7778

# மணமகன் தேவை

யாழ் இந்து வேளாளர் குல 29 வயதுடைய இடபராசி செவ்வாய் இல்லாத பட்டதாரி அரச உத்தியோகம் பார்க்கும் மணமகளுக்குப் பொருத்தமான மணமகன் தேவை.

074 043 8300
பெற்றோர் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

# மரக் கன்றுகள் விற்பனைக்கு!

இயற்கை முறையில் பராமரிக்கப்பட்ட நல்ல தரமான மரக் கன்றுகள் யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு.




கற்பகவனம் விற்பனை நிலையம். 461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் முற்றம் - Yarl Muttam) 021 492 7778

# யாழ் கலாலயா பயிற்சியகம்

A/L பெறுபேறுகளை எதிர்பார்த்திருக்கும் மாணவியரே!
வெளிநாடுகளுக்கு செல்ல இருக்கும் மங்கையரே!!
மற்றும் ஆர்வமுள்ள மகளிரே!!!

உங்களுக்கான 3 மாத கால பயன்மிகு பயிற்சிகள் 28.01.2021 தைப்பூசத்தன்று காலை 09.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

- கேக் ஐஸிங்
- கூந்தல் அலங்காரம்
- அழகுக்கலை (Makeup)
- Facial
- பல விதங்களில் சேலை அணியும் முறைகள்
- சிற்றுண்டிகள் மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு உணவுகள் தயாரித்தல்.

- பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- மேற்படி பயிற்சிகளுக்கு வயதெல்லை கிடையாது.
- இம்முறை A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவிகளுக்கு கட்டணத்தில் கழிவு வழங்கப்படும்
- சனி – ஞாயிறு அல்லது கிழமை நாள் பிரிவில் இணையலாம்.

மேலும் விவரங்களுக்கு நேரில் வருகை தரவும்.

இலங்கையின் மூன்றாம் நிலைக் கல்வி தொழிற்கல்வி ஆணையத்தால் (TVEC) அங்கீகரிக்கப்பட்டது.
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் போதனா வைத்தியசாலையின் பின் வீதி)

# செம்மணி

சூடான அரசியல் மற்றும் சமூகம் சார் கட்டுரைகளுடன்

28 ஆவது இதழ்



மெல்ல கபளீகரம் செய்யும் பௌத்தம்




மண் வாசம் தவழும் மாறுபட்ட கதைத் தொடர்கள்

கொழும்பு மற்றும் கிழக்கிலும்

அனைத்து முகவர்களிடமும் கேட்டு வாங்குங்கள்

வாசகர்களின் நன்மதிப்பைப் பெற்ற பல்சுவை வார இதழ்

# உக்ரைன் வைத்தியசாலையில் தீ விபத்து 15 பேர் உடல்கருகிப் பலி: 11 பேர் படுகாயம்



உக்ரைன் நாட்டின் கார்கிவ் நகரில் உள்ள வைத்தியசாலையில் நேற்று திடீரென பாரிய தீ விபத்து ஏற்பட்டது. தீ விபத்து ஏற்படும் போது மருத்துவமனையில் உள்ள மொத்தம் 33 பேர் சிக்கிக்கொண்டனர்.

இந்த தீ விபத்து குறித்து தகவலறிந்த தீயணைப்பு மற்றும் மீட்புக்குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று சிக்கியிருந்தவர்களை மீட்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். மீட்புக்குழுவினரால் சிலரை மட்டுமே காயங்கள் இன்றி மீட்க முடிந்தது.

இந்த நிலையில் விபத்தில் 15 பேர் உடல்கருகிப் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும், 11 பேர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

மருத்துவமனையில் ஏற்பட்ட தீ விபத்து குறித்து விரைவாக விசாரணை நடத்தும் படி உக்ரைன் அதிபர் வோலோடிமிர் ஜெலன்ஸ்கி உத்தரவிட்டுள்ளார்.

அதிகாரிகள் நடத்திய முதல்கட்ட விசாரணையில் மின்சாதன கருவியை கவனக்குறைவுடன் கையாண்டதாலேயே தீ விபத்து ஏற்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

# மொசாம்பிக் நாட்டை தாக்கிய கடும் சூறாவளி பெரும்பாலான பகுதிகள் வெள்ளக்காடாயின!



மொசாம்பிக் நாட்டில் வீசிய கடும் சூறாவளி தாக்குதலில் அந்நாட்டின் பெரும்பாலான பகுதிகள் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளன.

Eloise சூறாவளி இன்னும் இரண்டு தினங்களில் மேலும் தீவிரமடைந்து பேரழிவை ஏற்படுத்தும் என்று அந்நாட்டின் தேசிய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மொசாம்பிக் முழுவதும் சாலைகளில் வெள்ளம் சூழ்ந்திருப்பதால் மக்கள் அவதிக்கு ஆளாகி உள்ளனர்.

140 கிலோ மீட்டர் வேகத்தில் வீசிய இந்த சூறாவளியால் கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் 200மில்லி மீற்றர் அளவுக்கு மழை கொட்டித் தீர்த்துள்ளது. வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில் இருந்த மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்.

### ஜோ பைடன் பதவியேற்பு விழா;

# பாதுகாப்பு பணியில் ஈடுபட்ட 200 வீரர்களுக்கு கொரோனா



பைடன் பதவியேற்பு விழாவிற்கான பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்ட வீரர்களில் சுமார் 200 தேசிய பாதுகாப்பு படை வீரர்களுக்கு கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

அவர்களுக்கு உரிய சிகிச்சை அளிக்கப்படுகிறது. மற்ற வீரர்களுக்கு கொரோனா பரிசோதனை செய்யப்படுகிறது.

எனவே, பாதிப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என தெரிகிறது.

அமெரிக்காவில் கொரோனா வைரஸால் இதுவரை 4.10 லட்சம் பேர் உயிரிழந்துள்ளனர். கடந்த இரு தினங்களாக பலி எண்ணிக்கை4000 என்ற அளவில் உள்ளது.

அடுத்த 100 நாட்களுக்கு மக்கள் முகக் கவசம் கண்டிப்பாக அணிய வேண்டும் என்றும், கொரோனா வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்ற வேண்டும் என்றும் அரசு உத்தரவிட்டுள்ளது. வெளிநாடுகளில் இருந்து வருவோர் தனிமைப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று அதிபர் பைடன் உத்தரவிட்டுள்ளார்.

# தன் உத்தரவையே மீறிய ஜோ பைடன் முகக் கவசம் அணியாததால் சர்ச்சை



முகக் கவசம் அணிவதை கட்டாயமாக்கி உத்தரவு பிறப்பித்த சில மணி நேரத்தில் ஜனாதிபதி ஜோ பைடன் பொதுவெளியில் முகக் கவசம் அணியாமல் தோன்றி சர்ச்சையில் சிக்கினார்.

புதன்கிழமை மாலை வொஷிங்டனில் உள்ள முன்னாள் ஜனாதிபதி ஆப்ரஹாம் லிங்கனின் நினைவிடத்துக்கு சென்ற ஜோ பைடன் முகக் கவசம் அணியாமல் பத்திரிகையாளர்களுக்கு பேட்டி அளித்தார் எனக் கூறப்படுகிறது. இது சர்ச்சையை கிளப்பியுள்ளது. எனினும் உடனடியாக ஜோ பைடன் மாஸ்க் அணிந்துவிட்டது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக முகக் கவசம் அணிவது பற்றி ஜனாதிபதி ஜோ பைடன் டுவிட்டரில் "முகக் கவசங்கள் அணிவது ஒரு பாகுபாடான பிரச்சினை அல்ல. இது எண்ணற்ற உயிர்களை காப்பாற்ற கூடிய ஒரு தேசபக்தி செயல். எனவே தான் முகக் கவசம் அணிவதை கட்டாயமாக்கி உத்தரவு பிறப்பித்தேன்" என கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

# ஜப்பானில் ஒலிம்பிக் போட்டிகள் திட்டமிட்டபடி ஜூலை 23ஆம் திகதி



ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் இந்த ஆண்டு கோடைகால ஒலிம்பிக் போட்டிகள் திட்டமிட்டபடி நடைபெறும் என்று சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி தலைவர் Thomas Bach உறுதியாக தெரிவித்தார்.

டோக்கியோவில் பேசிய அவர், வருகிற ஜூலை மாதம் 23 ஆம் திகதி ஒலிம்பிக் போட்டியின் தொடக்க விழா நடைபெறும் என்றார். இந்த போட்டியில் பங்கேற்கும் விளையாட்டு வீரர்களின் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பான விளையாட்டு ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்றார்.

கடந்த ஆண்டு நடைபெற வேண்டிய இந்த போட்டிகள் கொரோனா காரணமாக ஒரு வருடம் தாமதமாக நடைபெற இருக்கிறமை குறிப்பிடத்தக்கது.

# காட்டு யானைகளை எண்ணுவதற்கு செயற்கைக்கோள் தொழில்நுட்பம்



செயற்கைக்கோள் படங்களை முதலில் பார்க்கும் போது பச்சை நிறப் பிளவுகளுக்கு மத்தியில், சாம்பல் நிறக் குமிழ்கள் இருப்பது போலத் தோன்றும் நெருக்கமாக அப்படத்தை ஆய்வு செய்தால், அக்குமிழ்கள் மரங்களுக்கிடையில் அலைந்து திரியும் யானைகள் எனத் தெரிய வந்தன.

புவியின் மேற்பரப்பிலிருந்து 600 கிலோ மீற்றர் தொலைவில் தன் சுற்று வட்டப்பாதையில் புவியைக் சுற்றிக் கொண்டிருக்கும் செயற்கைக்கோள்களிலிருந்து இந்தப் படங்கள் வருகின்றன.

இந்த தொழில்நுட்பத்தால், மேக மூட்டம் இல்லாத ஒரு நாளில், 5,000 சதுர கி.மீ வரை யானைகளின் வாழ்விடத்தை கணக்கிடுவதற்கான சாத்தியமிருக்கிறது.

பாத் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டாக்டர் ஓல்கா இசுபோவா கூறுகையில் ஏற்கனவே பாதுகாப்பு அமைப்புகள் விமானங்களைப் பயன்படுத்தி கணக்கெடுப்பதற்கு பதிலாக, இந்த முறையைப் பயன்படுத்த ஆர்வமாக உள்ளன எனவும் கூறினார். வணிக செயற்கைக்கோள்கள் எடுக்கும் படங்களைப் பெற, இயற்கை மற்றும் வன விலங்கு பாதுகாப்பு அமைப்புகள் பணம் செலுத்த வேண்டும்.

பல நாடுகளின் எல்லைகளை உள்ளடக்கிய யானைகளின் வாழ்விடங்களில் விமானங்களைப் பயன்படுத்தி கணக்கெடுப்பதற்கு அனுமதி பெறுவது மிகவும் சிக்கலானது. அப்படிப்பட்ட பகுதிகளில் அருகி வரும் யானைகளின் எண்ணிக்கையைக் கண்காணிக்கும் பணியை இது கணிசமாக மேம்படுத்தும்.


# கல்யாணமாலை

வட சர்வதேச திருமண சேவை



**மணமகன் விவரம்**

பிறந்த திகதி - 1987.08.01
மதம் - இந்து V
நட்சத்திரம் - சித்திரை 4
சூ/செவ் - 5 இல்
பாவம் - 22 1/2
கல்வி - A/L
தொழில் - மோட்டார் சைக்கிள் பாட்ஸ் கடை சொந்த தொழில்
எதிர்பார்ப்பு - படித்த பெண் தேவை

**மணமகள் விவரம்**

பிறந்த திகதி - 1987.11.20
மதம் - இந்து V
நட்சத்திரம் - மிருகசீரிடம் 4
செவ் - 7 இல்
பாவம் - 38 1/2
கல்வி - பிரான்ஸ் படிப்பு
தொழில் - பிரான்ஸ் PR அரசாங்க வேலை.
எதிர்பார்ப்பு - சுவிஸ், பிரான்ஸ் ஜேர்மன் மணமகன் தேவை.

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.

க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.

குஞ்சர் கடையடி,
பருத்தித்துறை பிரதான வீதி,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை

077 3434 415
077 8578 528

# 11ஆவது கட்ட பேச்சு முன்னேற்றம் ஏதும் இல்லை டெல்லியில் தொடரும் விவசாயிகள் போராட்டம்!



விவசாயச் சட்டங்கள் தொடர்பாக இந்திய அரசு மற்றும் விவசாய சங்கங்களுக்கு இடையே நடந்த 11ஆவது கட்ட பேச்சு எந்த முடிவும் எட்டப்படாமலே முடிந்தது.

டெல்லியில் உள்ள விக்ஞான் பவனில் நேற்று மத்திய அரசுக்கும் விவசாய சங்கங்களுக்கும் இடையே பேச்சுவார்த்தை நடந்தது.

இந்த பேச்சு வெறும் 15 – 20 நிமிடங்கள் மட்டுமே நடந்ததாக விவசாய சங்கத் தலைவர் தெரிவித்தனர்.

மத்திய அரசு கொண்டு வந்த புதிய விவசாயச் சட்டங்கள் பஞ்சாப், ஹரியானா மற்றும் சில மாநில விவசாயிகள் இடையே கடும் அதிருப்தியை ஏற்படுத்தியது. இதனால், கடந்த சுமார் 2 மாதங்களாக பல்வேறு மாநிலங்களில் இருந்து டெல்லி வந்துள்ள விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதைத் தொடர்ந்து இந்த சட்டங்களை ஒன்றரை ஆண்டுகள் நிறுத்தி வைப்பதாக மத்திய அரசு தெரிவித்தது. ஆனால், அதனை விவசாயிகள் ஏற்றுக்கொள்ளவில்லை.

விவசாய சட்டங்களை முற்றிலும் ரத்து செய்ய வேண்டும் என்பதே அவர்களின் கோரிக்கையாக இருக்கிறது.

இன்று நடந்த பேச்சுவார்த்தையில் எந்த முன்னேற்றமும் இல்லாமல் இருக்க, அடுத்தக்கட்ட பேச்சுக்கு இன்னும் நாள் குறிக்கப்படவில்லை.

முன்னதாக புதன்கிழமையன்று விவசாயிகளுக்கும், அரசுக்கும் நடைபெற்ற பத்தாவது சுற்று பேச்சில் விவசாய சட்டங்களை ஒரு வருடத்திற்கு நிறுத்தி வைப்பதாகவும், இருதரப்பு நபர்களையும் கொண்டு கமிட்டி ஒன்று உருவாக்கப்படும் எனவும் அரசாங்கம் முன் வைத்த யோசனையை விவசாயிகள் நிராகரித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# விவசாயத் தலைவர்களை கொல்ல முயற்சி டெல்லியில் பொலிஸாரால் ஒருவர் கைது



விவசாய தலைவர்கள் நான்கு பேரை சுட்டுக் கொல்ல முயன்றதாக பொலிஸார் ஒருவரை கைது செய்துள்ளனர்.

டெல்லியில் சிங்கூர் எனுமிடத்தில் விவசாயிகள் மத்திய அரசின் வேளாண் சட்டங்களைத் திரும்பப்பெற வலியுறுத்தி இன்று 59வது நாளாகப் போராட்டம் நடத்தி வருகின்றனர். வரும் 26ம் திகதி திட்டமிட்டபடி டிராக்டர் பேரணியை நடத்த உள்ளதாகவும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் இளைஞர் ஒருவரைப் பிடித்து விவசாயிகள் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். அந்த இளைஞனிடம் நடத்திய விசாரணையில் நான்கு விவசாய தலைவர்களைக் கொல்ல திட்டமிட்டதாக ஒப்புக் கொண்டார். விவசாயிகளின் போராட்டத்தில் குழப்பத்தை ஏற்படுத்த முயற்சித்தார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தம்முடன் இதுபோல் பத்து பேர் விவசாயிகள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தி கலவரத்தைத் தூண்ட முயற்சிப்பதாகவும் அவர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

# ஜெயலலிதாவின் வேதா இல்லம் மக்கள் பார்வைக்கு விரைவில்

சென்னை போயஸ் கார்டனில், மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதா வாழ்ந்த வேதா இல்லம், விரைவில் பொது மக்கள் பார்வைக்குத் திறக்கப்பட உள்ளதாகவும், இதுகுறித்த அறிவிப்பை, முதலமைச்சர் வெளியிடுவார் என்றும், தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் பாண்டியராஜன் தெரிவித்துள்ளார்.



சென்னை எழும்பூர் அருங்காட்சியக வளாகத்தில், மிகப் பெரிய புத்தக விற்பனை அரங்கம் திறப்பு நிகழ்வில் பங்கேற்ற பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் இதனைக் தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில், ஜெயலலிதா சேகரித்து வைத்திருந்த 15 ஆயிரம் புத்தகங்களும் அங்கு காட்சிப்படுத்தப்படும் என்றார்.

# சீரம் நிறுவன தீ விபத்து விசாரணைகள் ஆரம்பம்

நேற்றுமுன்தினம் பிற்பகல் சீரம் நிறுவன வளாகத்தில் உள்ள ஒரு 5 மாடி கட்டடத்தில் பயங்கரமாக தீ பற்றி எரிந்தது. தீயணைப்பு படையினர் 2 மணி நேரம் போராடி தீயை அணைத்தனர். மேலும் கட்டடத்தில் சிக்கிய 9 பேர் மீட்கப்பட்டனர். இதேவேளையில் 5 ஆவது மாடியில் தீயில் சிக்கி உயிரிழந்த 5 பேர் பிணமாக மீட்கப்பட்டனர்.



தீப்பிடித்த கட்டடத்தின் கட்டுமான பணிகள் தொடர்ந்து நடந்து வந்ததாகவும், உயிரிழந்தவர்கள் அந்த பணியில் ஈடுபட்ட ஒப்பந்த தொழிலாளர்கள் என்பதும் தெரிய வந்தது. பலியானவர்கள் குடும்பத்துக்கு தலா ரூ.25 லட்சம் நிதியுதவி வழங்கப்படும் என்று சீரம் நிறுவன தலைவர் ஆதர் பூனவாலா தெரிவித்தார்.

உலக அளவில் பல்வேறு தடுப்பு மருந்துகளை தயாரித்து வழங்கி வரும் சீரம் நிறுவனத்தில் ஏற்பட்ட தீ விபத்து பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்த துயர சம்பவத்துக்கு ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த், பிரதமர் மோடி உள்ளிட்ட தலைவர்கள் இரங்கல் தெரிவித்தனர்.

தீ விபத்து குறித்து புனே நகர ஹடப்சர் பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதற்கிடையே தீ விபத்து தொடர்பாக அரசு உயர் மட்ட விசாரணைக்கு உத்தரவிட்டு இருந்தது. அதன்படி புனே மாநகராட்சி, புனே பெருநகர மண்டல வளர்ச்சி கழகம், மராட்டிய தொழில் வளர்ச்சி கழகம் ஆகிய 3 அமைப்புகள் விசாரணையில் பங்கேற்று உள்ளன. அந்த அமைப்புகள் நேற்று தங்களது விசாரணையைத் தொடங்கின.

இதுகுறித்து புனே பெருநகர மண்டல வளர்ச்சி கழக தீயணைப்பு துறை தலைவர் தேவேந்திர பாட்போதே கூறுகையில், நாங்கள் நேரில் சென்று விசாரணை நடத்தினோம். தீ விபத்து ஏற்பட்டது எப்படி?, தீ பரவியது எப்படி? என்பது குறித்து ஆய்வு செய்தோம். புனே மாநகராட்சியின் திட்ட மற்றும் வளர்ச்சி ஆணையம், மராட்டிய தொழில் வளர்ச்சி கழகம் ஆகியவை தீ விபத்துக்கான காரணத்தை கண்டறிந்து ஒரு முடிவுக்கு வரும். அதன் அறிக்கை அரசிடம் தாக்கல் செய்யப்படும், என்றார்.

தடயவியல் நிபுணர் குழுவினரும் சம்பவ இடத்தில் தடயங்களை சேகரித்தனர்.

இதற்கிடையே முதல் – மந்திரி உத்தவ் தாக்கரே நேற்று தீ விபத்து நடந்த கட்டிடத்தை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது உடன் இருந்த சீரம் நிறுவனதலைவர் ஆதர்பூனவாலா நிருபர்களிடம் கூறியதாவது:-

தீ விபத்து காரணமாக கொரோனாத் தடுப்பு மருந்துக்கு பாதிப்பு இல்லை. சம்பவம் நடந்த கட்டடத்தில் இருந்து கொரோனா தடுப்பு மருந்து தயாரிப்பு பணி ஒரு கி.மீ. தொலைவில் நடந்து வருகிறது. ஆனால் விபத்து நடந்த கட்டடத்தில் காசநோய் தடுப்பு மருந்து மற்றும் ரோட்டா வைரஸ் தடுப்பு மருந்து தயாரிப்பு பணி நடந்து வந்தது. அந்த தடுப்பு மருந்துகள் சேதமடைந்துள்ளன. இந்த தீ விபத்து காரணமாக எங்களுக்கு ரூ.1,000 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது என தெரிவித்தார்.

# 20 லட்சம் டோஸ் தடுப்பூசி பிரேசிலுக்கு மோடிக்கு நன்றி தெரிவித்த பிரதமர்

இந்தியாவில் இருந்து வர்த்தக ரீதியிலான கொரோனாத் தடுப்பூசி மருந்து ஏற்றுமதி செய்வதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது. அதன்படி முதல் ஏற்றுமதியாக பிரேசில் மற்றும் மொரோக்கோ ஆகிய நாடுகளுக்கு விமானம் மூலம் மருந்துகள் அனுப்பி வைக்கப்பட்டன. பிரேசில் நாட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்ட 20 லட்சம் டோஸ் தடுப்பூசி மருந்துகள் பிரேசில் சென்றடைந்தன.

பிரேசில் நாட்டிற்கு கொரோனா தடுப்பூசி ஏற்றுமதி செய்து உதவிய இந்தியப் பிரதமர் மோடிக்கு நன்றி என்று போல்சனரோ டுவீட் செய்துள்ளார். உலகளாவிய நெருக்கடியை சமாளிக்க, சிறந்த நட்பு நாட்டை கொண்டிருப்பது பெருமைக்குரியது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



கொரோனா தொற்றுக்கு எதிரான போராட்டத்தில் பிரேசிலுடன் இணைந்து பணியாற்றுவது பெருமைக்குரியது என்று பிரதமர் மோடியும் டுவீட் செய்துள்ளார்.

# நாடு கடத்தலில் இருந்து தப்பிக்க புதிய முயற்சியில் விஜய் மல்லையா

பிரபல தொழில் அதிபர் விஜய் மல்லையா வங்கிகளில் ரூ. 9 ஆயிரம் கோடி கடன் வாங்கி விட்டு அதனை திருப்பி செலுத்தாமல் மோசடி செய்து விட்டு கடந்த 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் லண்டனுக்கு தப்பிச் சென்று தலைமறைவானார்.

அவர் மீது சி.பி.ஐ,.யும், அமலாக்கத்துறையும் வழக்கு பதிவு செய்தது. இந்த வழக்கில் விஜய் மல்லையாவை நாடு கடத்த இங்கிலாந்தைச் சேர்ந்த நீதிவான் நீதிமன்றம் 2018 டிசெம்பரில் உத்தரவிட்டது.

இதை எதிர்த்து அவர் லண்டனில் உள்ள மேன் முறையீட்டு நீதி மன்றில் முறையீடு செய்தார். இந்த மேல் முறையீட்டு மனுவையும் தள்ளுபடி செய்து நீதிமன்றில் கடந்த ஆண்டு ஏப்ரல் 20 ஆம் திகதி உத்தரவிட்டது.

இதையடுத்து விஜய் மல்லையா நாடு கடத்தும் நடவடிக்கையை இந்தியா மேற்கொண்டது. அவரை இந்தியாவுக்கு அனுப்பி வைக்குமாறு இங்கிலாந்திடம் மத்திய அரசு வலியுறுத்தியது.

ஆனால் இங்கிலாந்து நாட்டு குடியுரிமை பெற்றுள்ள விஜய் மல்லையாவை நாடு கடத்துவதில் சட்ட சிக்கல்கள் உள்ளன. இது தொடர்பான வழக்கு இங்கிலாந்து நீதிமன்றத்தில் நடந்து வருகிறது.

இதுகுறித்து இங்கிலாந்து அரசு கூறுகையில், சட்டங்களுக்கு உட்பட்டு விசாரணை நடந்து வருகிறது. அவை முடிந்த பிறகே விஜய் மல்லையாவை நாடு கடத்த முடியும். ஆனால் அதற்கு எவ்வளவு காலமாகும் என்பதை உறுதியாக கூற முடியாது என்று தெரிவித்தது.

இதையடுத்து தன்னை நாடு கடத்தாமல் இங்கிலாந்தில் வசிக்க அனுமதிக்க வேண்டும் என்று விஜய் மல்லையா கோரினார். ஆனால் கோர்ட்டு அதை ஏற்றுக் கொள்ளவில்லை.

இந்த நிலையில் நாடு கடத்தலில் இருந்து தப்பிக்க விஜய் மல்லையா புதிய முயற்சியை மேற்கொண்டிருப்பது தெரிய வந்துள்ளது. அவர் இங்கிலாந்தில் தனக்கு தஞ்சம் அளிக்குமாறு விண்ணப்பித்துள்ளார்.

தஞ்சம் கோரி விண்ணப்பித்ததை விஜய் மல்லையா இரகசியமாக செய்ததாக கூறப்படுகிறது. இந்த தகவலை இங்கிலாந்து உள்துறை அமைச்சகம் உறுதிப்படுத்தவும் இல்லை. மறுக்கவும் இல்லை.

நாடு கடத்தும் உத்தரவில் அமைச்சர் பட்டேல் கையெழுத்திடும் வரை விஜய் மல்லையா இங்கிலாந்தில் ஜாமீனில் தங்கி இருக்க முடியும்.

# பண்ணையாளர்களுக்குத் தடைவிதிக்காதிருக்க அரசுத் தரப்புக்கு மட்டு.மேல்நீதிமன்று உத்தரவு!





மட்டக்களப்பு, ஜன.23

மட்டக்களப்பு, மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் தரை வழக்கு முடியும் வரையில் பண்ணையாளர்களுக்கு பாதுகாப்பு வழங்குமாறு மட்டக்களப்பு மேல்நீதிமன்ற நீதிபதி பணிப்புரை விடுத்துள்ளார் என சிரேஷ்ட சட்டத்தரணி கே.எஸ்.ரத்தினவேல் தெரிவித்துள்ளார்.

அத்துடன், மேய்ச்சல் தரையைப் பாவிப்பதைத் தடைசெய்யவேண்டாம் எனவும் பணிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் தரைப் பகுதியில் அத்துமீறிய அபகரிப்புத் தொடர்பான வழக்கு நேற்று (வெள்ளிக்கிழமை) மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

கடந்த மாதம் 18ஆம் திகதி பண்ணையாளர்கள் சார்பில் மேய்ச்சல்தரை அபகரிப்புத் தொடர்பான வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்நிலையில், நேற்று மட்டக்களப்பு மேல் நீதிமன்றில் நீதிபதி எம்.என்.அப்துல்லா தலைமையில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரதிவாதிகளும் மேய்ச்சல் தரையில் அத்துமீறியதாக குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவரும் நீதிமன்றில் ஆஜராகியிருந்தனர்.

இதன்போது, மேய்ச்சல் தரையில் பண்ணையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக நீதிமன்றின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

அத்துடன், மேய்ச்சல் தரைப் பண்ணையாளர்களுக்கு பாதுகாப்பு வழங்கவேண்டும் என்றும் பண்ணையாளர்கள் மேய்ச்சல் தரையைப் பயன்படுத்துவதைத் தடைசெய்யக் கூடாது எனவும் கோரப்பட்ட நிலையில், அதனை நடைமுறைப்படுத்துவதாக அரச சட்டத்தரணி ஏற்றுக்கொண்டார். மேலும், இது தொடர்பாக உரிய அதிகாரிகளை அறிவுறுத்துவதாக நீதிமன்றுக்கு வாக்குறுதியளித்தார்.

இதனைவிட, தற்போது மேய்ச்சல் தரை அபகரிக்கப்பட்ட தாகத் தெரிவிக்கப்படும் பகுதியைத் தவிர அப்பகுதியில் எந்தவொரு செயற்பாடுகளையும் முன்னெடுக்கக் கூடாது என்பதற்கும் அரச சட்டத்தரணி இணக்கம் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, வழக்கின் இறுதித் தீர்ப்பு வழங்கப்படும் வரையில் தற்போது பிடிக்கப்பட்டுள்ள காணியை அவ்வாறே பேணுமாறும் வேறு எந்தச் செயற்பாடுகளையும் முன்னெடுக்கக் கூடாது எனவும் பணிக்கப்பட்டுள்ளதாக சட்டத்தரணி ரத்தினவேல் தெரிவித்துள்ளார்.

குறித்த வழக்கின் அடுத்த விசாரணை எதிர்வரும் மார்ச் ஐந்தாம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

# கொரோனாத் தொற்றை இல்லாமலாக்க முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கை!

## வைத்தியர் சி.யமுனானந்தா



கொவிட் நோயை இல்லாது செய்வதற்கு சுகாதாரப் பழக்க வழக்கங்களை தவறாது கடைப்பிடிக்க வேண்டியது மிகவும் அவசியமாகுமென வைத்தியர் சி.யமுனானந்தா தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

தற்போது உலகில் கொவிட் வைரஸ் பரம்பலில், மூன்று வகையான விகாரமடைந்த கொவிட் வைரஸ்கள் முக்கிய இடத்தை வகிக்கின்றன.

வேகம் குறைவாகக் காணப்பட்டாலும் புதிதாக மாற்றமடையும் அவ்வாறு உருமாறிய கொவிட் கிருமியால் ஏற்படும் பாதிப்புகள் தற்போது மீளவும் உலகை அச்சுறுத்தி உள்ளன.

பிரித்தானியாவில் உருமாறிய புதிய கொவிட் பரம்பலானது இன்று உலகில் 55 நாடுகளில் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இவ்வாறு புதிய விகாரத்தால் உருமாறும் கொவிட் கிருமிகளால் ஏற்படும் பாதிப்புக்களைக் கட்டுப்படுத்த மீளவும் ஆரம்பத்தில் இருந்து முயற்சி எடுக்கவேண்டிய அவலநிலை ஏற்படும்.

கொவிட் கிருமிகள் விகாரமடைய பல காரணிகள் துணைபோகலாம். குறிப்பாக வைத்தியசாலைகளில் கொவிட் நோயாளிகளுக்கு எக்ஸ் கதிர் மூலம் பரிசோதனைகள் செய்யும்போது கிருமிகள் விகாரமடையலாம்.

சமூகத்தில் குறித்த சிலருக்கு கொவிட் தடுப்பு மருந்து கொடுக்கும்போது ஏனையவர்களில் விகாரமுற்ற கொவிட் கிருமிகள் உருவாகலாம். இவை யாவும் எதிர்வரும் இரண்டு வருடங்களுக்கு உலகளாவிய ரீதியில் சவால்களாக அமையும்.

இந்நிலையில் பயணக்கட்டுப்பாடுகள், சமூக இடைவெளி பேணல், தனிமைப்படுத்தப்படல், முகக்கவசம் அணிதல், கைகளை அடிக்கடி கழுவுதல் போன்ற சுகநல எச்சரிக்கைக் காப்புக்களை கட்டாயம் கடைப்பிடித்தல் அவசியம்.

ஏனெனில் சீனாவில் இருந்து பரவிய வைரஸ் போல் இன்று உலகின் எந்த மூலையில் இருந்தும் புதிது புதிதாக கொவிட் வைரஸ் விகாரமடைந்து பரவலாம்.

அதற்கு உரிய தடுப்பு மருந்து தயாரிப்பதற்கு முன்பே மீண்டும் பாரிய அழிவை ஏற்படுத்தலாம். எனவே சுகாதாரப் பழக்கங்களே கொவிட்டை உலகில் இருந்து முற்றாக அகற்ற உதவும். அதற்காக இன்னும் இரண்டு வருடங்கள் சுகநல வழிகளில் கவனமாக இருத்தல் வேண்டும். - என அவர் வலியுறுத்தியுள்ளார்.

# இலிசியம் முன்பள்ளியின் வருடாந்த கலை விழா

இலிசியம் முன்பள்ளியின் வருடாந்த கலை விழா நாளையதினம் திவ்யமஹால் மண்டபத்தில் காலை 10.30மணிக்குஆரம்பமாக உள்ளது.

இலிசியம் முன்பள்ளியின் நிர்வாக இயக்குனர் திரு. நவநீதன் தலைமை தாங்கும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகம் விரிவுரையாளர் திரு.விஜயபாஸ்கர் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

தொடர்ந்து சிறுவர் நிகழ்ச்சிகளும், மாணவர்கள் கௌரவிப்பு மற்றும் பரிசில் வழங்கல் என்பன இடம்பெறும்.

சுகாதார நடைமுறைகளை பின்பற்றி நடைபெறும் இந் நிகழ்விற்கு மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு விழாக் குழுவினர் அன்புடன் வேண்டி நிற்கின்றனர்.

# கொரோனா பெருந்தொற்று கணவன் – மனைவி சாவு!

## மட்டக்களப்பில் சோகம்

மட்டக்களப்பு சுகாதாரப் பிரிவுக்குட்பட்ட கோட்டைமுனை பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவர் கொரோனாத் தொற்று காரணமாக காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

மட்டக்களப்பு அரசடி கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்ட கோட்டமுனையில் கொரோனா தொற்று காரணமாக கடந்த 16 ஆம் திகதி 79 வயதுடைய ஆணொருவர் உயிரிழந்தார்.

இந்நிலையில், குறித்த ஆணின் மனைவி உட்பட குடும்ப உறுப்பினர்கள் ஐந்து பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, அரசடி கிராம சேவையாளர் பிரிவு தனிமைப்படுத்தப்பட்ட பகுதியாக முடக்கப்பட்டது.

இந்நிலையில், உயிரிழந்த ஆணின் மனைவி (71வயது) காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் கொரோனாத் தொற்றுக்கு சிகிச்சை பெற்றுவந்த நிலையில் நேற்று (வெள்ளிக்கிழமை) காலை உயிரிழந்துள்ளார்.

இதேநேரம், அரசடி கிராம சேவையாளர் பிரிவில் இதுவரையில் மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் மற்றும் பி.சி.ஆர். பரிசோதனைகளின் அடிப்படையில் 22 பேர் கொரோனா தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர் என பொதுச்சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்தில் 531 பேர் கொரோனா தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர் என மட்டக்களப்பு பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் வைத்தியர் நா.மயூரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஆறாக உயர்ந்துள்ளது.

# அனுராதபுரத்தில் கிராமம் முடக்கம்!

அனுராதபுரம் தேவநம்பியதிஸ்ஸ புரத்தில் ஏ - 295 கிராம சேகவர் பிரிவு உடன் அமுலுக்கு வரும் வகையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

கொரோனா தொற்றுப் பரவல் காரணமாக குறித்த பகுதி முடக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா அறிவித்துள்ளார்.


# மஞ்சள் கன்றுகள் விற்பனைக்கு!

**நல்ல தரமான இரண்டு அடி வரை வளர்ந்த ஒன்றரை மாத மஞ்சள் கன்றுகள் யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு.**

**விலை - 150/=**







**கற்பகவனம் விற்பனை நிலையம்.**
**461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**
**(யாழ் முற்றம் - Yarl Muttam)**
**021 492 7778**


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.01.2021இல் வெளியிடப்பெற்றது.